

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் வையம்பட்டி ஒன்றியத்தில் மணப்பாறை திண்டுக்கல் சாலையில் சுங்கச்சாவடி அருகே பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட 100 அடி உயர கொடி மரத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கழகக் கொடியேற்றி வைத்து விழாப் பேருரை ஆற்றினார். இந்நிகழ்வில் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது, மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சேகரன், வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, மாவட்டகழக மாநில நிர்வாகிகள், கவிஞர் சல்மா, கோவிந்தராஜ், குணசேகரன், வையம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் குணசீலன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராமசாமி, செல்வராஜ், பழனியாண்டி, சின்ன அடைக்கன், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பெரும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகர கழகத்தின் சார்பில் 57வது வட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்களுக்கு நல உதவிகள் வழங்கினார். நிகழ்வில் கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், பகுதி கழக செயலாளர் க.லட்சுமணக்குமார், மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### உலக சுற்றுலா தலத்திற்கு இணையாக

# பூம்புகார் சுற்றுலா தலம் மேம்படுத்தும் பணி!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, ஜூன் 24 -

மயிலாடுதுறை மாவட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பூம்புகார் சுற்றுலா தலம் உலக சுற்றுலா தளத்திற்கு இணையாக ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி தரங்கம்பாடி, டேனிஷ் கோட்டை ஆளுநர் மாளிகை, அருங்காட்சியகம் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் மிக விரைவில் புனரமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் பூம்புகாரில் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் பூம்புகார் சுற்றுலாத் தலம் மேம்படுத்தும் பணி, தரங்கம்பாடி வட்டம், தரங்கம்பாடி டேனிக்ஷ் கோட்டை சுற்றுலாத் துறை சார்பில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி தொல்லியல் துறை மூலம் ஆளுநர் மாளிகை ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணி, அருங்காட்சியகம் ரூ.3 கோடி செலவில் மேம்படுத்தும் பணி என மொத்தம் ரூ.10.17 கோடி மதிப்பீட்டில் மிக விரைவில் மேம்படுத்தும்; பணிகள் தொடங்கப்படவுள்ளதை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப் பின் திருக்கடையூரில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளருக்கு அளித்த பேட்டி வருமாறு:-

மயிலாடுதுறையில் சுற்றுலாத்துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் ஆய்வு செய்தோம். தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை 1620-ல் கட்டப்பட்டது. கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் சுற்றுலாத்துறை மானிய கோரிக்கையின் போது டேனிஷ் கோட்டையை புதுப்பிக்க ரூ.3 கோடி செலவில் ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இப்பணிகள் இந்த வாரம் துவங்கப்படும்.

டேனிஷ் கோட்டை பொதுமக்கள் பார்ப்பதற்காக மிக சிறப்பாக புணரமைக்கப்படும். அதேபோல பூம்புகாரில் ரூ.23.60 கோடி மதிப்பீட்டில் உலக சுற்றுலாத் தலத்திற்கு இணையாக பூம்புகார் சுற்றுலாத் தலம் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி ஆறு மாதங்களில் நிறைவடையும். இது முதற்கட்ட பணியாகும். இரண்டாவது கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேம்பாட்டுப் பணி நடைபெறும். பூம்புகார் சுற்றுலா மையம் முத்தமிழறிஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மயிலாடுதுறை மாவட்டத்தில் 2022-ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகள் 6 லட்சத்து 60 ஆயிரம் பயணிகள் வருகை தந்துள்ளனர். 2023-ஆம் ஆண்டு கடந்த 4 மாதங்களில் 9 லட்சத்து 71 ஆயிரம் நபர்கள் வருகை தந்துள்ளனர். தமிழகத்திற்கு தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. திருக்கடையூர் தமிழ்நாடு ஹோட்டல் தரம் உயர்த்தப்படும். தரங்கம்பாடி தமிழ்நாடு ஹோட்டல் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றப்பின் மறுசீரமைக் கும் பணி நடைபெற்று பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி அனைத்துத் துறைகளும் சிறந்து விளங்குவதுபோல சுற்றுலாத் துறை முதன்மையாக சிறந்து விளங்கும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி. மகாபாரதி, சீர்காழி வருவாய் கோட்டாட்சியர் திருமதி. உ. அர்ச்சனா, மாவட்ட சுற்றுலா இயக்குநர் அரவிந்த் குமார், தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் திருமதி. சுகுண சங்கரி மற்றும் பலர் உடனிருந்தனர்.

# புதுடெல்லியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

## தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தகவல்!

புதுடெல்லி, ஜூன் 24 -

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100-வது பிறந்த நாளையொட்டி நூற்றாண்டு விழா ஆண்டு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி புதுடெல்லியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா 23, 24, 25 ஆகிய நாட்களில் சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. அதன்படி 23.06.2023 அன்று மோதிபாக் டெல்லி தமிழ் கல்விக் பள்ளியில் கழக

1. கலைஞரும் - கலையும்
2. கலைஞரும்- ஆட்சியும்
3. கலைஞரும் சமூக நீதியும் என்ற தலைப்பில் பள்ளி மாணவ மாணவிகளுக்கிடையே பேச்சுப் போட்டி நடைபெற்றது.

இன்று (24.06.2023) காலை 10.00 மணிக்கு ஆர்.கே.புரம் செக்டர் IV, இல் உள்ள டெல்லி தமிழ் கல்விக் கழக பள்ளியில் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெறவுள்ளது. டெல்லியில் வாழும் பொது மக்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இன்று (24.06.2023) மாலை 5 மணிக்கு தில்லி தமிழ்ச் சங்கம், ஆர்.கே. புரம், செக்டர்-IV, வில் உள்ள தில்லி தமிழ்ச் நடைபெறவுள்ள முத்தமிழ் கலைஞர் நூற்றாண்டு விழாவில் சங்கத்தில் மாபெரும் சிறப்பு நகைச்சுவை சிந்தனை அரங்கம் நடைபெறவுள்ளது. இதில் திராவிட சூரியனின் கதிர்கள் அதிகம் சுட்டது, வடக்கிலா? தெற்கிலா? என்ற தலைப்பில் சென்னை பழனி, அறந்தாங்கி திருமதி நிஷா, திருச்சி திருமதி அன்ன லெட்சுமி, கோவை மஞ்சுநாதன் மற்றும் கலைமாமணி நாகை நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர்.

25.06.2023 அன்று மாலை 5 மணிக்கு ஆர். கே.புரம், செக்டர்-v,வில் உள்ள தில்லி தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவுள்ள முத்தமிழ் கலைஞர் நூற்றாண்டு விழாவில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் ஆர். எஸ்.பாரதி பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றி ஆற்றவுள்ளார்.

அதனை தொடர்ந்து ஐ.லியோனி, தலைவர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் தலைமையில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. இதில் சமூக நீதியை காக்கும் திராவிட மாடல் ஆட்சியில் பெரிதும் வழிகாட்டுவது "கலைஞரின் ஆட்சி பணியே" என்ற தலைப்பில் கவிஞர் இனியவன் அவர்களும்

"கலைபணியே" என்கின்ற தலைப்பில் பேராசிரியர் விஜயகுமார் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

எனவே முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவிற்கு அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### அரியலூர் மாவட்ட முரசொலி செய்தியாளர்

# குமாரின் துணைவியார் கு.பூங்கொடி இறுதி ஊர்வலம்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் நேரில் அஞ்சலி!

அரியலூர், ஜூன் 24 -

அரியலூர் மாவட்ட முரசொலி நாளிதழ் செய்தியாளர் மு.குமார் அவரின் துணைவியார் கு.பூங்கொடி திடீர் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார். தகவல் அறிந்த மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் அவரது இல்லத்திற்கு நேரில் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி செய்தியாளர் மு.குமார், அவரது மகன் கு.சபரிவாசன், மகள் ஸ்ரீமதி மற்றும் அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார் .

ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் பிரபாகரன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள்,

மறுநாள் காலை 11, 30. மணிக்கு ஜெயங்கொண்டம் அண்ணாநகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்ட இறுதி ஊர்வலத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் இடுகாடுவரையில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

அமைச்சர் அவர்களுடன் கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், கழக கொள்கைப் பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சந்திரசேகர், லதா பாலு, மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், மா.அன்பழகன், இரா.மணிமாறன், ரெங்க.முருகன், வா.செளந்தர ராஜன், வேப்பூர் இராஜேந்திரன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர் ப. கோபாலகிருஷ்ணன்,காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் சங்கர்,ம.ஐ.க மாவட்ட செயலாளர் அக்பர்அலி, ஜெயங்கொண்டம் நகர்மன்ற தலைவர் சுமதி சிவகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. பாலு, ஆர்.எம்.அன்பழகன், வி.எம்.ஷாஜகான், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தெய்வ. இளையராஜா, க.தர்மதுரை, எஸ்.ஆர்.ராமராஜன், என்.ஆர்.ராமதுரை, தங்கை.எழில்மாறன்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், தலைமை கழக பேச்சாளர்கள் பூ.குமார், கவிஞர் வீரமுரசு, தஞ்சை மாவட்ட முரசொலி செய்தியாளர் சரவணன், அரசு வழக்கறிஞர்கள் சின்னதம்பி, ராஜா, மு த்தமிழ் செல்வன், மோகன்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பஞ்சநாதன்,பழக்கடை பாலு, முன்னாள் மாவட்டப் பிரதிநிதி பஞ்சநாதன், பிரிதிவிராஜன், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், மற்றும் கழக நிர்வாகிகள் செல்வேந்திரன், பாலமுருகன், அறிவழகன், பாலா, ஆசை. அன்பு, முத்தமிழ்செல்வன், உதயகுமார், கார்த்திகைகுமரன், ஆ.நடராஜன், எஸ். கே.பி.சங்கரன், அகிலன்,இதயதுல்லா,உத்திராபதி, மகேந்திரன், சேகர், கதிரவன், அருண், நடராஜன், நகர கழக நிர்வாகிகள் ஞானபிரகாசம், இராஜமாணிக்கம், பா.ரமேஷ்,

பிரபாகரன், செந்தில்குமார், கொளஞ்சியப்பா, நிர்மலா செல்வம், இராஜேந்திரன், குமரவேல், வெற்றி, செல்வகுமார், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழா!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. கழகக் கொடியேற்றினார்!

திருச்சி, ஜூன் 24 -

திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் வையம்பட்டி ஒன்றியத்தில் மணப்பாறை திண்டுக்கல் சாலையில் சுங்கச்சாவடி அருகே பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட 100 அடி உயர கொடி மரத்தில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கழகக் கொடியேற்றி வைத்து விழாப் பேருரை ஆற்றினார் .

தமிழகத்தில் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வையும் மேம்படுத்திட கலைஞர் எண்ணற்ற திட்டங்களை தீட்டினார். குடிசை மாற்று வாரியம், கண்ணொளி திட்டம் இப்படி எண்ணற்ற திட்டங்களை தந்தவர் தான் மறைந்த முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் ஆனால் கொள்கையோடு இருக்கும் தி.மு.க வை சீண்டி ப்பார்க்கிறார்கள், அழிக்க நினைக்கிறார்கள். ஆனால் எவ்வளவு சீண்டிப்பார்த்தாலும் தி.மு.க வை யாராலும் அழிக்க முடியாது என்று பேசினார். இந்நிகழ்வில் வரவேற்புரை வையம்பட்டி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ராஜேந்திரன் நன்றியுரை வையம்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஸ்ரீரங்கன் ஆகியோர் ஆற்றினார்கள்.

இந்நிகழ்வில் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்சமது, மாநகரக் கழக செயலாளர் மதிவாணன், தலைமை செயற்குழு உறுப்பினர் சேகரன், வண்ணை அரங்கநாதன், சபியுல்லா, மாவட்டகழக மாநில நிர்வாகிகள் கவிஞர் சல்மா, கோவிந்தராஜ்,

குணசேகரன், வையம்பட்டி ஒன்றிய பெருந்தலைவர் குணசீலன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராமசாமி, செல்வராஜ், பழனியாண்டி, சின்ன அடைக்கன், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் , பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

### ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள்!

## அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார்!

ஈரோடு, ஜூன் 24 -

ஈரோடு மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் 19.06.2023 அன்று ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி மற்றும் ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி.சு.நாகரத்தினம் ஆகியோர் முன்னிலையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார்.

இதில் அவர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசின் திட்டங்கள் அனைத்தும் கடைக்கோடி மக்களுக்கும் கிடைக்கின்ற வகையில் பல்வேறு திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம ஊராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை தேவைகள் அனைத்தும் தங்கு தடையின்றி கிடைத்திட பிற மாநிலங்கள் பின்பற்றுகின்ற வகையில் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாநகராட்சியின் வளர்ச்சியில் தனி கவனம் செலுத்தி வருகிறார்கள். இதற்காக, கடந்த 2 ஆண்டுகளில் அதிகப்படியான நிதியினை ஒதுக்கி தந்துள்ளார்கள். அவ்வாறு நிதி ஒதுக்கியதின் அடிப்படையில், பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன். மேலும், ரூ.160.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 378 கி.மீட்டர் தொலைவிற்கு 1140 இடங்களில் சாலைகள் மேம்பாடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுமார் ரூ.647.00 கோடி நிதியினை ஒதுக்கி தந்துள்ளார்கள். அதில் ரூ.42.00 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி கிடைத்துள்ளது. மேலும், ரூ.163.00 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு நிதி கோரி திட்ட விவரங்கள் நகராட்சி நிர்வாகத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கான நிதி கிடைத்தவுடன் மீதமுள்ள பணிகளும் நடைபெறும். மேலும், 19.06.2023 அன்று ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சுமார் ரூ.8.16 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மக்கள் நலனில் அன்பும், அக்கறையும் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது அன்பையும் ஆதரவையும் அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, அமைச்சர் சு.முத்துசாமி, நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் மற்றும் மாநில நிதி குழு மானியம் (மண் சாலையை தார் சாலையாக மாற்றுதல்) திட்டத்தின் கீழ், ஈரோடு மாநகராட்சிக் குட்பட்ட வார்டு எண் 33 அவ்வையார் மற்றும் பாரி வீதி பகுதி, வார்டு எண் 47 கோவலன் வீதி பகுதி, வார்டு எண் 31 ராஜாஜி வீதி 2 பகுதி, வார்டு எண் 32 கட்டபொம்மன் வீதி பகுதி ஆகிய இடங்களில் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணியினையும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 48 எம்.எஸ்.கே நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணியினையும், மாநில நிதி குழு மானிய திட்டத்தின் கீழ், ரூ.114.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 50 ஸ்ரீ கார்டன் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணியினையும், மாநில நிதி குழு மானிய திட்டத்தின் கீழ், ரூ.125.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 49 ரயில் நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணியினையும், நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் மற்றும் மாநில நிதி குழு மானிய திட்டத்தின் கீழ், ரூ.206.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 30 திருமலை கார்டன் பகுதி மற்றும் வார்டு எண் 10 வித்யா நகர் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணியினையும் என மொத்தம் ரூ.615.00 இலட்சம் மதிப்பீட்டிலும், நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 1 கூட்டுறவு காலனி, செங்குந்த புரம், வார்டு எண் 2 அம்மன் நகர், வாசவி நகர், ராஜீவ் நகர் மற்றும் வார்டு எண் 4 சொட்டயம்பாளையம், ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணியினையும், ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 3 குறிஞ்சி நகரில் வடிகால் அமைக்கும் பணியினையும், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 4 அம்மன் நகர் பகுதியில் வடிகால் அமைக்கும் பணியினையும் மற்றும் மாநில நிதி குழு மானிய தி ட்டத்தின் கீழ், ரூ.61.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண் 4 வேலன் நகர் பகுதி மற்றும் வார்டு எண் 13 கந்தையன் தோட்டம் ஆகிய பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணியினையும் என ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.816.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வளர்ச்சி திட்டப்பணிகளை துவக்கி வைத்து திட்டப்பணிகளை விரைவாக முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வர வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் திருமதி. ஜானகி ரவீந்திரன், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாநகர பொறியாளர் விஜயகுமார், ஈரோடு வட்டாட்சியர் ஜெயகுமார், மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர்கள் பழனிச்சாமி (1ம் மண்டலம்), சசிகுமார் (3ம் மண்டலம்), மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி ஒன்றியத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கிராம சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 9 ஊராட்சிகளில் ரூ.6.24 கோடி மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் எருமப்பட்டி ஒன்றிய கழக செயலாளரும், அட்மா குழுத் தலைவருமான பாலு (எ) பாலசுப்பிரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பவித்திரம் கண்ணன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.